DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C :29/2026</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 2</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு.குருமூர்த்தி</td><td colspan="2" rowspan="2">Occupation</td><td>:</td><td rowspan="2">கூலி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>தங்கதுரை</td><td></td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>வலையப்பேட்டை</td><td colspan="2" rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">32</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of July 2026.
10-07-2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.54**

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் தாலுக்கா , வலைபேட்டையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். நான் 22/03/2025 ஆம் தேதியன்று காலை 9.30 மணியளவில் நானும், வலையப்பேட்டை சேர்ந்த நாகராஜன் மகன் விஜயகுமாரும் தாராசுரம் புளியம்தோப்பு அருகே சென்ற போது, கும்பகோணம் தாலுக்கா போலிஸ் அங்கு நின்றுக்கொண்டிருந்தார்கள். முதல் நாள் நடந்த சம்பவம் குறித்து படம் வரைந்து அங்கு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் . அதில் போலிசார் கையொப்பம் போடச்சொன்னார்கள் . அதில் நானும் , விஜயகுமாரும் கையெழுத்து செய்தோம் . அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ–2.** அதில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான் . போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

போலிசார் கையெழுத்து வாங்கியதாக கூறும் அ.சா.ஆ.2 இல் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தன என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான் . உண்மையில் நான் சொன்ன தேதியில்

**சொன்ன நேரத்தில் நான் சொன்ன இடத்திற்கு செல்லவேயில்லை என்றும் வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**முடிக்கப்பட்ட நேரம்: 01.00**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.